## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure

### In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| Calendar | : **Case No.419/2014** |
| Miscellaneous | : |
| Summary Trial | : |
| Maintenance | : |
| Deposition of witness for prosecution | : **P.W. 2.செல்வம்** |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **01.08.2018**

**மு.வி:**

நான் தற்போது உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2009 ஆம் தேதி மாலை 6 மணி அளவில் சார்பு ஆய்வாளர் மோகன் அவர்களின் உத்தரவின்பேரில் பெண் முதல்நிலை காவலர் திருமதி.முத்துலட்சுமி 1334, 14வது சிறப்பு அணியை சேர்ந்த திரு.சாக்கரடீஸ் 2099 மற்றும் மற்றொரு காவலர் உத்தராஜ் ஆகியோர்களுடன் விநாயகர் சதுர்த்தி விநாயகர் சிலை பாதுகாப்பு பணியில் இருந்தபோது எழுமலை 8வது வார்டை சேர்ந்த சன்னாசி மகன் பிச்சைமணி மற்றும் 6வது வார்டை சேர்ந்த ராஜாமணி மகன் பார்த்தசாரதி ஆகியோர் எழுமலை பேருந்து நிலையம் முன்பு 2வது எதிரி பார்த்தசாரதி கையில் பீர்பாட்டிலுடன் 1வது எதிரி பிச்சைமணி சோடாபட்டிலுடனும் இருவரும் சத்தம்போட்டுக்கொண்டு மாறி மாறி அடித்துக்கொண்டிருந்தார்கள். பேருந்து நிலையம் என்பதால் பொதுமக்கள் கூடும் இடம் என்பதால் சண்டைபோட்டுக்கொண்டிருந்தவர்களை காவலர்களாகிய நாங்கள் 4 பேர்களும் சண்டையை விலக்கிவிட சென்றோம். எதிரிகள் இரண்டு பேரும் எங்களை பார்த்து போலீஸ்கார நாய்களா நீ என்னடா சொல்லுவது மறியாதையாக போய்விடுங்கள் இல்லை என்றால் பாட்டிலை கொண்டு எறிந்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியும் தேவடியா மகனே அவுசாரி மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள். மேற்படி எதிரிகளை ஹோட்டல் உரிமையாளர்கள் இரண்டு பேர் வந்து எங்களுக்கு உதவியாக இருந்து மீண்டும் சண்டையை விலக்கிவிட அவர்கள் உதவியுடன் எச்சரித்தோம். எதிரிகள் இருவரும் சொல்பேச்சு கேளாமல் எங்களை பணி செய்யவிடாமல் இரண்டு

எதிரிகளும் கையில் இருந்த பாட்டில்களை கொண்டு எங்களை நோக்கி எறிந்தார்கள். நானும், பெண் காவலர் முத்துலட்சுமியும் காவலர் உத்தராஜ்சும் விலக்கிகொண்டோம். சாக்கரடீஸ் என்பவரின் வலது மார்பில் அந்த பாட்டில் பட்டு உள்காயம் ஏற்பட்டுவிட்டது. காயம்பட்ட காவலர் சாக்கரடீஸ் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை வந்தார். இந்த சம்பவம் சம்மந்தமாக காவலர் முத்துலட்சுமி எழுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:

நாங்கள் விநாயகர் சதுர்த்தி பாதுகாப்பிற்கு அந்த சிலையை வைத்தவர்கள் பாதுகாப்பு கோரியதின் அடிப்படையில் தான் சென்றோம் என்றால் சரிதான். பாதுகாப்பு கோரி யார் மனு கொடுத்தார்கள் என்றால் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக மனு கொடுக்கப்பட்டது. எதிரிகள் இருவரும் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவர்களா என்றால் அது எனக்கு தெரியாது, ஊரில் உள்ள பெரிய நபர்கள்தான் பாதுகாப்பு கேட்டு மனு கொடுப்பார்கள் என்றால் சரிதான். எதிரிகள் எந்த ஜாதியை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் மாற்றி தாக்கி கொண்டதற்கு அவர்கள் யாராவது புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. முதல் நாள் பாதுகாப்பு பணியிலேயே இந்த சம்பவம் நடந்துவிட்டது. அதன்பிறகும் அந்த சிலைக்கு போலீசார் பாதுகாப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் பாதுகாப்பு பணிக்கு சென்ற சிலை மணியன்மார்கள் வசிக்கும் பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த சிலை மதுபான கடைக்கு பக்கத்தில் தான் வைக்கப்பட்டிருந்தது என்றால் 50 அடி தூரம் தள்ளி வைக்கப்பட்டிருந்தது. சம்பவத்தன்று அந்த மதுபான கடை திறந்திருந்தது என்றால் சரிதான். அந்த மதுபான கடைக்கு அருகில் எப்பொழுதும் 50 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் அன்று 10 நபர்கள் தான் கூடியிருந்தார்கள். நான் சிலை இருந்த இடத்திலிருந்து 10 மீட்டர் தூரத்தில் பாதுகாப்பு பணியில் இருந்தேன். நாங்கள் அனைவரும் ஒரே இடத்தில் தான் இருந்தோம். நான் சொல்லுவதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் எங்களால் பாதுகாப்பு கொடுக்க முடியாததால் நாங்கள் தான் அத்து மீறி பொதுமக்களை தாக்கினோம் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தை சொல்லி திட்டி பணி செய்யவிடாமல் தடுத்து தாக்கி கொலை மிரட்டல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் ஊருக்கு செல்வதற்காக பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும் வேறு நபர்களை கைதுசெய்ய முடியாததால் எதிரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது இந்த வழக்கிற்கு முன்பு வேறு ஏதாவது வழக்கு நிலுவையில் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. எனது மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.